# அரையாண்டுப் பொது தேர்வு , டிசம்பர் - 2019

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 3.00 மணி

## உயிரியல்

மதிப்பெண்கள்:70

பகுதி - I உயிரி - தாவரவியல் மதிப்பெண்கள் : 35

### பிரிவு - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 8x1=8

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. கீழ்கண்டவற்றுள் ஆர்க்கிபாக்டீரியம் அல்லாதது, எது?

அ) மைக்கோபாக்டீரியம் ஆ) மெத்தனோபாக்டீரியம்

இ) தெர்மோபிளாஸ்மா ஈ) ஹாலோபாக்டீரியம்

2. எதிர் புவி நாட்டமுடைய வேர்களுக்கு எடுத்துக்காட்டு

அ) ஐபோமியா, டாலியா ஆ) அஸ்பராகஸ், ரூயெல்லியா

இ) அவிசீனியா, ரைசோஃபோரா ஈ) வைடிஸ் , போர்டுலகா

3. கீழ்கண்டவற்றை சரியான முறையில் பொருத்துக.

1) கதிர் - a) நெல்

2) சிறு கதிர் - b) கோஜோஸ்

3) தொங்கு கதிர் - c) அக்கிராந்தஸ்

4) மட்டல் கதிர் - d) அகாலிபா

| | 1 | 2 | 3 | 4 | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | b | d | a | c | ஆ) | c | a | d | b |
| இ) | a | b | c | d | ஈ) | d | b | a | c |

4. ரைபோசோம்களின் இரண்டு துணை அலகுகளும் எந்த அயனி நிலையில் நெருக்கமாகத் தொடர்ந்து சேர்ந்திருக்கும்?

அ) கால்சியம் ஆ) சோடியம்

இ) மெக்னீசியம் ஈ) ஃபெர்ரஸ்

5. செல்லின் மொத்த RNA - வில் கடத்து RNA - வின் விழுக்காடு

அ) 3% ஆ) 80% இ) 5% ஈ) 15%

6. மீண்டும் இடம்பெயராத தனிமம் எது?

அ) பாஸ்பரஸ் ஆ) பொட்டாசியம்

இ) கால்சியம் ஈ) நைட்ரஜன்

7. எவ்வகை பச்சையத்தில் பைட்டால் வால்பகுதி காணப்படுவதில்லை?

அ) பச்சையம் 'a' ஆ) பச்சையம் 'b'

இ) பச்சையம் 'c' ஈ) பச்சையம் 'd'

8. நெடும்பகல் தாவரம் அல்லாதது எது?

அ) பட்டாணி ஆ) சோயா மொச்சை

இ) பார்லி ஈ) ஓட்ஸ்

## பிரிவு - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8

9. பாக்டீரிய செல்லின் படம் வரைந்து பாகம் குறிக்கவும்
10. இலைத்தொழில் தண்டு பற்றி சிறுகுறிப்பு வரைக.
11. ரசிம், சைம் மஞ்சரிகளை வேறுபடுத்துக.
12. நொதிகளின் பண்புகள் யாவை?
13. டைலோசஸ் பற்றி சிறுகுறிப்பு வரைக.
14. வரையறு. போல்டிங், ரிச்மாண்ட் லாங்க் விளைவு

## பிரிவு - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x3=9

வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

15. மொனிராவின் சிறப்புப்பண்புகளை எழுதுக.
16. கணிகங்களை வகைப்படுத்துக.
17. மைட்டாசிஸ் செல்பகுப்பின் சிறப்பியல்புகளை எழுதுக.
18. உருளைக் கிழங்கு ஆஸ்மாஸ்கோப் சோதனையை விளக்குக.
19. $C_3$ மற்றும் $C_4$ தாவரங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டினை அட்டவணைப்படுத்துக.

## பிரிவு - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2x5=10

20. i) பிரையோபைட்டுகளின் மூன்று வகுப்புகள் யாவை?

    ii) ஜிம்னோஸ்பெர்ம் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம்களை வேறுபடுத்துக.

    (அல்லது)

    கிளைட்டோரியா டெர்னேஷியா கலைச்சொல் விளக்கம் தருக. மலர் வரைபடம் வரைந்து வாய்ப்பாட்டினை எழுது.

21. i) தண்டு நுனி ஆக்குத்திசு பற்றிய ஹிஸ்டோஜன் கொள்கை பற்றி சிறு குறிப்பு தருக.

    ii) ஒரு வித்திலை இரு வித்திலை தாவர வேர்களின் உள்ளமைப்பியல் வேறுபாடு தருக.

    (அல்லது)

    கிரப்ஸ் சுழற்சியின் வரைபடம் வரைக.

உயிரி - விலங்கியல் மதிப்பெண்கள்: 35

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.
ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து , குறியீட்டுடன் விடையளி.

பிரிவு - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8x1=8

1. _______ ஜீன்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டினால் முப்பேருலக கோட்பாடு முன் மொழியப்பட்டது.
அ) 60 s rRNA
ஆ) 70 s rRNA
இ) 16 s rRNA
ஈ) mRNA

2. சுரப்பு , பாதுகாப்பு மற்றும் உறிஞ்சுதல் ஆகிய பணிகளைச் செய்யும் எப்பித்தீலியம்
அ) பொய் அடுக்கு எப்பிதீலியம்
ஆ) கூட்டு எப்பிதீலியம்
இ) கனசதுர எப்பிதீலியம்
ஈ) தூண்வடிவ எப்பிதீலியம்

3. தவறான இணையை கண்டுபிடி
அ. ஸ்டார்ச் - அமைலேஸ்
ஆ. புரதம் - பெப்சின்
இ. காசின் - டிரிப்சின்
ஈ. கொழுப்பு - லிப்பேஸ்

4. பொருத்தி சரியான வரிசையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| A | | B |
|---|---|---|
| I காக்சா | - | a தடித்தது |
| II ட்ரொக்காண்டர் | - | b நீண்டது |
| III ஃபீமர் | - | c சிறியது |
| IV டிபியா | - | d பெரியது |

அ. Ia II b IIIc IV d
ஆ) Id II c III b IV a
இ) Ia IIc IIId IV b
ஈ) Ib II a IIIc IVd

5. அசிட்டாபுலம் இதில் அமைந்துள்ளது
அ) காரை எலும்பு
ஆ) இடுப்பு எலும்பு
இ) தோள்பட்டை எலும்பு
ஈ) தொடை எலும்பு

6. கூற்று (கூ) : உள்காது சமநிலை உறுப்பாக செயல்படுகிறது
காரணம் (கா) : இதில் செவி சிற்றெலும்புகள் உள்ளன
அ) (கூ) மற்றும் (கா) உண்மை, கா என்பது (கூ) ன் சரியான விளக்கம்
ஆ) (கூ) மற்றும் (கா) உண்மை, (கா) என்பது (கூ) ன் சரியான விளக்கம் இல்லை
இ) (கூ) சரி, மற்றும் (கா) தவறு
ஈ) (கூ) மற்றும் (கா) இரண்டும் தவறு

7. நோய்த்தடைக்காப்புடன் தொடர்புடைய நாளமில்லா சுரப்பி எது?
அ) பீனியல் சுரப்பி
ஆ) அட்ரினல் சுரப்பி
இ) தைமஸ் சுரப்பி
ஈ) பாராதைராய்டு சுரப்பி

8. சிறுநீரக நுண்குழல்களில் நீர் மீள உறிஞ்சப்படுதலுக்கு உதவும் ஹார்மோன்

அ) கோலிசிஸ் டோகைனின் ஆ) ஆஞ்சியோடென்சின் II

இ) ஆன்டி டையூரிடிக் ஹார்மோன் ஈ) பான்கிரியோசைமின்

பிரிவு - II

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4x2=8

9. ஃபைலோஜெனி - வரையறு.

10. இரத்தம் ஏன் தனித்துவமான இணைப்புத்திசு என்றழைக்கப்படுகிறது?

11. GERD - விரிவாக்கம் தருக. இது பொதுவாக யாதென அறியப்படுகிறது?

12. நிணநீர் என்றால் என்ன? அதன் பணிகள் யாவை?

13. டெட்டனி எவ்வாறு ஏற்படுகிறது.

14. டையபெட்டிஸ் இன்சிபிடஸ் என்றால் என்ன?

பிரிவு - III

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3x3=9

வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

15. தோலுரித்தல் என்றால் என்ன?

16. டெர்கம் மற்றும் ஸ்டெர்னம் - வேறுபடுத்துக.

17. மேற்பரப்பிகள் என்றால் என்ன?

18. அக்குவாஃபோரின்கள் என்பவை யாவை?

19. போடோசைட்டுகள் என்பவை யாவை?

பிரிவு - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2x5=10

20. எலும்பு மண்டலத்தில் ஏற்படும் குறைபாடுகள் பற்றி விளக்குக.

*(அல்லது)*

தைராய்டு சுரப்பியின் செயல்களில் ஏற்படும் குறைபாடுகள் பற்றி குறிப்பு எழுதுக.

21. பாலூட்டியின் சிறப்பு பண்புகளை பட்டியலிடுக.

*(அல்லது)*

தமனிக்கும் , சிரைக்கும் இடையிலான வேறுபாடுகளை எழுதுக.

★★★★★★